TAMILNADU STATE TRANSPORT CORPORATION (MADURAI) LIMITED
( A Government of Tamilnadu Undertaking)
Byepass road, Madurai 625010
Phone: 2380112-3 Fax: 0452-2381567
E.mail: tnstcmdu.bbu@gmail.com

---

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி படிவம் எண் | : 02 |
| ஒப்பந்தப்புள்ளி கொடுக்க கடைசி நாள் | : 18.04.2022 மாலை 5.00 மணி |
| ஒப்பந்தப்புள்ளி படிவம் திறக்கப்படும் /ஏலம் நடைபெறும் நாள்/நேரம் | : 19.04.2022 காலை 11.00 மணி |

---

## நிபந்தனைகள்

01) ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர், படிவம் ஒன்றுக்கு ரூ. 58/- (வரி உட்பட திரும்பத்தரப்படாதது) செலுத்தி அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். Internet ல் Download செய்து டெண்டர் படிவம் விண்ணப்பிப்பவர்கள் டெண்டர் படிவத்திற்கான கட்டணம் ரூ. 58/- (ஐம்பத்தி எட்டு மட்டும் ) ஐ முன் வைப்பு தொகையுடன் சேர்த்து செலுத்த வேண்டும்.

02) GST NUMBER & PAN NUMBER உள்ளவர்களுக்கு மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும். மேலும் ஆதார் அட்டை நகல் சமர்ப்பித்தல் அவசியம்.

03) ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றவர்கள் விற்பனைக்குள்ள பொருட்களை எழுத்து மூலம் பெறப்பட்ட முன் அனுமதியுடன் மேலே குறிப்பிட்ட ஏல நாட்களுக்கு ஐந்து நாட்களுக்கு முன்னதாக மட்டும் காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரையிலும், மாலை 2.00 மணி முதல் 5.00 மணி வரையிலும் பார்வையிடலாம். பொருட்களை பார்வையிடும் போதோ ஏலத்தின் போதோ ஏலப் பொருட்களை எடுக்கும் போதோ எந்தவிதமான புகார்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

04) ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கு நிறுவனத்தின் உரிமையாளரோ அல்லது நிறுவனத்தின் உரிமையாளரால் அங்கீகரிக்கப்பட்ட நபரோ அதற்குரிய ஒப்புதல் கடிதத்துடன் வந்தால் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி படிவம் வழங்கப்படும். உறுதி உத்தரவு பெற்ற லாட்டுகள் மாற்றத்தக்கவையல்ல.

05) ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி படிவங்களுடன் எவ்வித நிபந்தனைகளோ விதிகளோ கூடுதலாக இணைத்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

06) ஏலம் மற்றும் டெண்டரில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்களிடமிருந்து நுழைவுக் கட்டணமாக நபர் ஒன்றுக்கு ரூ 100/- வீதம் (ரூபாய் நூறு மட்டும்) வசூலிக்கப்படும். இத்தொகை திரும்ப வழங்கப்பட மாட்டாது.

07) ஒவ்வொரு முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளியுடன் முன் வைப்புத் தொகையாக கீழ்க்கண்ட அடிப்படையில் கேட்பு வரைவோலை இணைக்கப்பட வேண்டும்.
கழிவு பொருட்கள் / டயர்கள்

அ) கேட்புத் தொகையில் 10% அல்லது ரூ. 1000/- இதில் எது அதிகமோ அந்த தொகை

ஆ) கேட்புத் தொகை ரூ. 1000/- க்கு குறைந்தால் முழுத்தொகையும்

**"தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்க வகையில் கேட்பு வரைவோலை ஒப்பந்தப்புள்ளி படிவத்துடன் இணைக்கப்பட வேண்டும்".**

08) ஒவ்வொரு ஏலதாரரும் ஏலம் முடிவடைந்தவுடன் அவர் அனுகூலமான ஏலதாரராக இருக்கும் பட்சத்தில் கீழ்கண்டவாறு முன் வைப்புத் தொகை செலுத்தவேண்டும்.

அ) கேட்புத் தொகையில் 10% அல்லது ரூ. 1000/- இதில் எது அதிகமோ அந்த தொகை

ஆ) கேட்புத் தொகை ரூ. 1000/- க்கு குறைந்தால் முழுத்தொகையும்

**"தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்க வகையில் வரைவோலையாகவோ அல்லது பணமாகவோ அந்த இடத்திலேயே உடனடியாக செலுத்தவேண்டும்".**
**அவ்வாறு செலுத்த தவறும் பட்சத்தில் அவர் செலுத்தி உள்ள முன் நுழைவு வைப்புத் தொகை பிடித்தம் செய்யப்படுவதுடன் அடுத்த ஏலத்தில் அவர் கலந்து கொள்ள இயலாது மேலும் அந்த ஏலதாரரை கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.**

09) டெண்டரின் போது முன் வைப்புத்தொகை குறைவாகவோ அல்லது முன் வைப்புத்தொகை வரைவோலையை இணைக்கத் தவறினாலோ மேற்படி டெண்டர்தாரர் அளித்துள்ள டெண்டர் படிவம் நிராகரிக்கப்படும்.

10) ஏலதாரர்கள் ஏல முன் நுழைவு வைப்புத் தொகையாக ரூ3000/-(ரூபாய் மூவாயிரம் மட்டும்) செலுத்த வேண்டும் இத்தொகையானது ஏலம் முடிந்த பின்பு ஏலம் எதுவும் கிடைக்கப்பெறாதவர்களுக்கு உரிய நடைமுறைகளைப் பின்பற்றி திரும்ப வழங்கப்படும்.

11) முன் வைப்புத்தொகை/முன் நுழைவு வைப்புத் தொகைக்கு எந்தவித வட்டியும் வழங்கப்படமாட்டாது.

12) குறிப்பாகச் சொல்லப்பட்டிருந்தாலொழிய " இருந்தது இருந்த படியே" என்ற நிபந்தனையில் மட்டுமே கழிவுப் பேருந்துகள் /லாட்டுகளாக ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் விற்கப்படும். விற்பனை செய்யப்பட்ட பேருந்துகளுக்கு உத்தரவாதம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

13) முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்குள் வந்து சேர வேண்டும். காலதாமதமாக வரும் ஒப்பந்தப்புள்ளிகள் நிராகரிக்கப்படும்.

14) ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் / ஏலதாரர்கள் ஏலம் நடக்கும் நாளில் டெண்டர் நோட்டீஸில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாகவே ஏலம் நடக்கும் இடத்திற்கு வர வேண்டும் தாமதமாக வரும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் / ஏலதாரர்களை கண்டிப்பாக அனுமதிக்க இயலாது.

15) எவ்வித காரணமும் சொல்லாமல் விளம்பரம் செய்யப்பட்டுள்ள லாட்டுகள் முன் அனுமதியின்றி விற்பனையிலிருந்து நீக்குவதற்கு நிர்வாகத்திற்கு முழு அதிகாரமுண்டு.

16) எவ்வித காரணமும் சொல்லாமல் ஒப்பந்தப்புள்ளியை நிராகரிக்க மாறுதல் செய்ய எந்த ஒரு நிபந்தனையும் புதிதாய் சேர்க்க நிர்வாகத்திற்கு சகல உரிமையுண்டு.

17) லாட்டுகள் ஒன்றன்பின் ஒன்றாக பொது ஏலம் விடப்படும். அதிக தொகைக்கு கேட்கப்படும் ஏலம் திரும்ப பெறமுடியாது. மேலாண்மை இயக்குநர்/குழுவின் ஒப்புதலின் பெயரில் ஏற்றுக் கொள்ளப்படும். பிரச்சனை ஏற்படும் பட்சத்தில் அந்த குறிப்பிட்ட லாட் மறுபடியும் கடைசியில் பிரச்சனையின்றி முடிவான ஏலத் தொகையிலிருந்து மறு ஏலம் விடப்படும்.

18) ஏலம் மேலாண்மை இயக்குநராலோ அல்லது அவரது பிரதிநிதிகளாலோ நடத்தப்படும். ஏலம் முடிந்த பின்பு குறிப்பிட்ட காலத்திற்குள் பெறப்பட்ட அந்த ஏலத்திற்காக வந்துள்ள ஒப்பந்தப்புள்ளிகள் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் / ஏலதாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒரு லாட்டிற்கு ஏலம் / டெண்டரில் குறிப்பிட்டுள்ளதில் எது அதிகமானதோ அந்த தொகையை ஏற்றுக்கொள்ளப்படும்.

19) ஒப்பந்தப்புள்ளி / ஏலத்தில் ஒத்துக் கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து குறிப்பிட்ட லாட் வாங்குகிறவர்களின் பொறுப்பில் இருப்பதாக கொள்ளப்படும்.

20) <u>எடை விபரம் சம்பந்தமாக:—</u>

- காலி லாரி எடை முதலில் எடுக்கப்பட்ட பின்பு அனுமதிக்கப்பட்ட லாட்டுகள் ஏற்ற இயலும்
- இருக்கக்கூடிய அனைத்து பழைய ரெக்கார்டுகள் ரேப்பர் அட்டை உள்பட உள்ளது உள்ளபடியே எதையும் கழிவு செய்யாமல் எடுத்துக்கொள்ளப்படவேண்டும்.
- அனுகூலமான ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்த புள்ளிதாரர் / ஏலதாரர் ரூ25/- மதிப்பு முத்திரைத் தாளில் பழைய ரெக்கார்டுகளை காகித ஆலைக்கு மட்டும் நேரடியாக கொண்டு செல்வதை உறுதி செய்து ஆவணமாக சமர்ப்பித்தல் வேண்டும். உறுதிமொழி பத்திரத்தில் தெரிவித்துள்ளபடி காகித ஆலைகளில் ஒப்படைத்தற்கான அனுமதி கடிதம் பட்டியல்கள் மற்றும் காகித ஆலையிலிருந்து மேற்படி பழைய ரெக்கார்டுகள் மற்றும் இன்வாய்ஸ்கள் அனைத்தும் காகித கூழ் தயாரித்து பயன்படுத்தப்படும் என்பதற்கான சான்றிதழ் பெற்று சமர்ப்பிக்கவேண்டும்.

21) கழிவு பேட்டரி, கழிவு ஆயில், கழிவு டயர் போன்றவற்றிற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் / மத்திய அரசு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சான்றிதழ் சமர்ப்பித்தல் அவசியம் ஆகும்.

22) மின் கழிவு பொருட்களுக்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் / மத்திய அரசு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சான்றிதழ் சமர்ப்பித்தல் அவசியம் ஆகும்.

23) அனுகூலமான ஒப்பந்தப்புள்ளிதாரர்/ ஏலதாரர் விற்பனை உறுதி உத்தரவை கழகத்திலிருந்து பெற்ற பின்பு நடைமுறையில் உள்ள விற்பனை வரி, மேல் வரி , மற்றுமுள்ள வரிகள் ஒத்துக் கொள்ளப்பட்ட ஏலத்தொகையுடன் சேர்த்து விற்பனை உறுதி உத்தரவு அனுப்பிய தேதியிலிருந்து 14 (பதினான்கு) வேலை நாட்களுக்குள் பணம் முழுமையாக முன்னதாக கழக அலுவலகத்தில் செலுத்தி பின்னர் தங்களது சொந்த ஏற்பாடுகள் மூலம் சொந்த செலவில் லாட்டுகளை எடுத்துக் கொள்ள வேண்டும். வைப்புத்தொகை கடைசியாக டெலிவரி எடுக்கும் லாட்டின் போது தான் சரி செய்யப்படும்.

24) கேட்பு வரைவோலை மூலமாக முழுத்தொகையையும் செலுத்தி காலை 10.00 மணி முதல் 3.00 மணிக்குள் கண்டம் பேருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

25) தாமதமாக எடுக்கப்படும் கண்டம் பேருந்துகளுக்கு ஏலத் தொகையில் நாள் ஒன்றுக்கு 2% சுணக்க கட்டணமாக வசூலிக்கப்படும். இச்சலுகை அடுத்த தொடர்ந்த 10 (பத்து) நாட்களுக்குத் தான் அளிக்கப்படும். அவ்வாறு அளிக்கப்பட்ட காலம் முடிந்தவுடன் பணம் செலுத்த அனுமதிக்கப்பட மாட்டாது. செலுத்தப்பட்ட முன் வைப்புத்தொகை முழுவதும் பறிமுதல் செய்யப்படுவதுடன் ஒதுக்கீடு செய்யப்பட்ட லாட்டுகள் ரத்து செய்யப்படுவதுடன் கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

26) கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை எதுவாயிருப்பினும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) (வரையறுக்கப்பட்டது) என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்க வகையில் கணக்கு வைத்திருப்பவர் ( A/C Payee) என்று போடப்பட்ட கேட்பு வரைவோலை ( Demand draft) யாகத்தான் செலுத்த வேண்டும்.

27) அனுகூலமாகாத ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் / ஏலதாரர்களுக்கு அவர்களுக்குரிய முன் வைப்புத்தொகை காசோலையாக உரிய நடைமுறைகளை பின்பற்றி திருப்பி அனுப்பி வைக்கப்படும்.

28) மேலாண்மை இயக்குநர் / குழுவால் எடுக்கப்படும் முடிவே இறுதியானது.

29) இது சம்பந்தமாக தாவா ஏதாவது ஏற்படின் அது மதுரையில் அமைந்துள்ள நீதிமன்றங்களின் அதிகார எல்லைக்குள் மட்டுமே தீர்த்துக் கொள்ளத்தக்கது.

30) ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் அனைத்து பக்கத்திலும் ஒப்பந்தப்புள்ளிதாரர் **"கையொப்பம்"** இட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவத்திலும், பணம் திரும்ப பெறும் பொழுதும் கையொப்பம்/நிறுவன முத்திரையுடன் கூடிய கையொப்பம் இருக்க வேண்டும். கையொப்பமிட்டவரின் அலுவலக பதவி குறிப்பிடப்பட வேண்டும்.

31) ஒப்பந்தப்புள்ளிதாரர்/ஏலதாரர் ஏலம் கேட்கும் பொருட்களுக்கு ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் குறிப்பிட்டபடி முறையே **லாட்,நம்பர்,மெட்ரிக் டன்,**என்று தான் விலை குறிப்பிட வேண்டும். அவ்வாறு விலை குறிப்பிடப்படாதபட்சத்தில் மேற்படி பொருட்களை ஒதுக்க இயலாது.

32) முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை கீழ்க்கண்ட விலாசமிட்டு ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் 18.04.2022 மாலை 5.00 மணிக்குள் போட வேண்டும்.

**மேலாண்மை இயக்குநர்**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை)**
**வரையறுக்கப்பட்டது**
**புறவழிச்சாலை, மதுரை 625010**

| | |
|---|---|
| All payments should be made by "A/C PAYEE' Drafts, favouring 'TAMILNADU STATE TRANSPORT CORPORATION (MADURAI) LTD' PAYABLE AT MADURAI ONLY | கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) வரையறுக்கப்பட்டது என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்க வகையில் கணக்கு வைத்திருப்பவர் (A/C Payee) என்று போடப்பட்ட கேட்பு வரைவோலையாகத்தான் செலுத்த வேண்டும். |

**ஒப்பந்தப்புள்ளிதாரர் கையொப்பம்**